விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 289 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 17 வியாழக்கிழமை (03.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தே தீருவோம்

### அமைச்சர் விஜித ஹேரத் வாக்குறுதி

7ஆம் பக்கம் பார்க்க


## போர்க்குற்ற விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கச் சொல்லுங்கள்

### அநுரவிடம் வலியுறுத்துமாறு ஜெய்சங்கரிடம் கோரிக்கை

3ஆம் பக்கம் பார்க்க

## அரசின் ஊழல் எதிர்ப்பு திட்டம் பாராட்டுக்குரியது

### அநுரவிடம் நேரில் தெரிவித்த இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்புத் திட்டம் பாராட்டுக்குரியது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் நேரில் தெரிவித்தார் இந்திய உயர்ஸ் தானிகர் சந்தோஸ் ஜா.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விற்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் 15

## ஐ.நா தீர்மானத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்க நடவடிக்கை

### இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை வாக்கெடுப்பின்றி மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## புதிய சீர்திருத்தங்கள் ஐ.எம்.எப் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் புதிய சீர்திருத்தங்கள் பாராட்டுக் குக்குரியது என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டப் பிரதி நிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. 02

## வட மாகாண ஆளுநர் செயலகத்தால் மூவருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலை யில் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் கடமை யாற்றிய மூவருக்கு இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி 15

## ஐ.எம்.எப் விடயத்தில் அரசு வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும்

### சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத் துடனான பேச்சு வார்த்தைகளை அர 15

## ஒரு கோடியே 5 இலட்சம் ரூபாய் யாழ்ப்பாணத்தில் வழிப்பறி

### காணி விற்ற பணத்துடன் வீடு திரும்பியவரை மோ.சைக்கிளில் பின்தொடர்ந்தவர்கள் தாக்கிவிட்டுக் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தனது காணியை விற்ற பணம் ஒரு கோடியே 5 இலட்சம் ரூபாய் பணத்துடன் வீடு திரும்பிக் கொண்டி 15

## நாவாந்துறையில் வீடொன்றில் தீ விபத்து



15

## தோட்டத்துக்குச் சென்றவர் மயங்கி விழுந்து மரணம்

### கோப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தோட்டத்துக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் தோட் டக் காணியில் மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய்ப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் மத்தி யைச் சேர்ந்த மூன்று 15

## நெல்லியடி நகரில் இனந்தெரியாத நபர்களால் புடைவையகத்துக்கு தீ வைப்பு

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் களால் நெல்லியடி நகரில் புடைவையகம் ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

நெல்லியடி நகரப் பகுதியில் இயங்கி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய சீர்...

IMF பிரதிநிதிகள் குழுவிற்கும் புதிய அரசாங்கத்தின் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பொருளாதாரக் குழுவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற போதே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் எதிர்காலச் செயற்திட்டம் குறித்து ஆராய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உயர்மட்டக் குழுவொன்று நேற்று இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது.

IMF திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் 2.9 பில்லியன் டொலர் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் நான்காவது தவணையை பெறுவது பற்றி ஆராய்வதே இந்த விஜயத்தின் நோக்கமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வேலைத்திட்டம் தொடர்பில் இதன் போது இருதரப்பும் மீளாய்வு செய்ததோடு அதன் எதிர்காலச் செயற்பாடுகளுக்கான திட்டங்கள் குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இலங்கை தொடர்பான சாதகமான அணுகுமுறையை அதிகரித்து தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய சீர்திருத்தங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்திருந்ததுடன் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான இலங்கையின் அர்ப்பணிப்பு மற்றும் சர்வதேசத்தின் தொடர்ச்சியான ஆதரவை நோக்கி ஒரு தீர்க்கமான முன்னெடுப்பும் இங்கு கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது.

இதில் IMF தூதுக்குழுவில் சிரேஷ்ட தூதுக் குழுத் தலைவர் டொக்டர் பீட்டர் ப்ருவர், வதிவிடப் பிரதிநிதி கலாநிதி சர்வத் ஜஹான் மற்றும் பொருளாதார நிபுணர் மானவி அபேவிக்ரம ஆகியோர் இடம்பிடித்ததோடு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஹர்சன சூரியப்பெரும, பொருளாதாரக் கொள்கைப் பேரவையின் தலைவரும் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான டொக்டர் அனில் ஜெயந்த ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

அரசாங்கம் சார்பாக பொருளாதாரக் கொள்கை தொடர்பான பேரவையின் பிரதான உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி, பேராசிரியர் சீதா பண்டார ரணதுங்க, சுனில் கமகே, ஜனாதிபதி சிரேஷ்ட ஆலோசகர் துமிந்த /ஹலங்கமுவ, நந்தசிறி கிஹிம்பியஹெட்டி, பேராசிரியர் ஓ.ஜி.தயாரத்ன பண்டா, அமரசேன அத்துகோரள ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7)


**NAC WORLD**

கலை, வர்த்தக, கணித & உயிரியல் பிரிவுகள்

ஆரம்பம் : 05.10.2024


சனிக்கிழமை காலை 8.00

இடம் : உயர்கல்லூரி வளாகம் - 2ஆம் மாடி ஆரியகுளம், யாழ்ப்பாணம் (2166)

076 187 9502


# கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவு வழங்கப்படும்

## அநுரவிடம் கனேடிய உயர்ஸ்தானிகர்



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயன்முறைக்கு ஆதரவு வழங்கப்படும் என கனேடிய உயர்ஸ்தானிகர் ஜனாதிபதி அநுரவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பெற்ற வெற்றிக்கு தனதும் கனேடிய அரசாங்கத்தினதும் மக்களினதும் மனப்பூர்வமான வாழ்த்துத் தெரிவித்த கனேடியத் தூதுவர், ஊழலை ஒழித்து நாட்டில் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவதில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அர்ப்பணிப்பையும் பாராட்டினார்.

ஊழல் மற்றும் பாதுகாப்பின்மையும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் முக்கிய தடையாக இருப்பதாக சுட்டிக்காட்டிய எரிக் வோல்ஷ், உத்தேச சீர்திருத்தங்களின் மூலம் சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பதற்கான மிகவும் பொருத்தமான சூழல் இலங்கையில் உருவாகும் என நம்பிக்கை தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கை தொடர்புபட்டிருப்பது மற்றும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் கடன் மறுசீரமைப்பு செயல் முறைக்கும் கனேடிய அரசாங்கத்தின் முழு ஆதரவையும் வழங்குவதாகவும் உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார். (ம-7)

## மேலும்...

இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் மற்றும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான நிலைவரங்கள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் இடம்பெற்ற இச்சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் வரை நீடித்தது.

இதன்போது நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி உள்ளடங்கலாக தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு, தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரம், ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து சுமந்திரனிடம் தூதுவர் ஜூலி சங் கேட்டறிந்தார்.

அதேபோன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த சுமந்திரன், பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல், புதிய அரசியலமைப்பு உருவாக்க செயன்முறையைத் தொடர்ந்து முன்னெடுத்தல் என்பன உள்ளடங்கலாக சில நேர்மறையான வாக்குறுதிகளை இப்புதிய அரசாங்கம் வழங்கியிருப்பதாக சுட்டிக்காட்டினார்.


அதற்குப் பதிலளித்த அமெரிக்கத் தூதுவர் தம்மிடம் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கு அவசியமான தொழில்நுட்பங்கள் இருப்பதாகவும், அதனை அரசாங்கத்துக்கு வழங்கி உதவுவதற்குத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அதேவேளை எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தியினால் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளமுடியுமா எனவும் இதன்போது அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த சுமந்திரன், அரசாங்கம் அமைப்பதற்குத் தேவையான சாதாரண பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்தியினால் பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்புவதாகவும், இருப்பினும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர், இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை வாக்கெடுப்பின்றி மேலும் ஒருவருட காலத்துக்கு நீடிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகக் குறிப்பிட்டார். (ம-7)


# மரண அறிவித்தல்

தோற்றம் 16 01 1965



மறைவு 02 10 2024

## சின்னமணி மகேந்திரராசா

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் தொகுதிப்பண்ணை இராச வீதி, கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னமணி மகேந்திரராசா அவர்கள் நேற்று (02.10.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னமணி - பூரணம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பத்மாவதி தம்பதியரின் அன்பு மருமகனும் விஜயராணியின் (மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்), அன்புக் கணவரும் நிதர்சன் (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - நீர்வேலி), மதுஷா (மாணவி - மருத்துவபீடம் - யாழ்.பல்கலைக்கழகம்), சகானா (A/L 2023 மாணவி - யா/வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மல்லிகாதேவி, விமலாதேவி, சந்திராவதி, மனோகரராசா (அஞ்சல் அலுவலகம் - யாழ்ப்பாணம்), பூலோகவதி, காலஞ்சென்ற தருமராசா மற்றும் நிரஞ்சினிதேவி (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - நீர்வேலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்வராணி, கந்தசாமி (ஓய்வுநிலை இலங்கை வங்கி), காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் ஜெயராணி, புஸ்பராணி, ஜெயராசா, புஸ்பராசா, காலஞ்சென்ற விஜயராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2024) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பி.ப 1.00 மணியளவில் தகனக் கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இராச வீதி,
கோப்பாய். (2195) குடும்பத்தினர்



# வேலைவாய்ப்புகள்

சாரதி, பாதுகாப்பு உத்தியோகத்தர், கிளாக், விற்பனையாளர், கிளீனர், சமையலாளர், வெயிட்டர், உதவியாளர், ஸ்டோர் கீப்பர், வெல்டர், காப்பென்டர் (2193)

074 083 3368, 076 098 4532

# விற்பனைக்கு

யாழ். மின்சார நிலைய வீதியில் 1 ஆம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக்காணியும்
யாழ். மின்சார நிலைய வீதியில் 2ஆம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக்காணியும்
யாழ். மின்சார நிலைய வீதியில் 3ஆம் ஒழுங்கையில் 1 1/2 பரப்புக்காணியும்
யாழ். பிறவுண் வீதியில் 2 பரப்புக்காணியும் உடன் விற்பனைக்குண்டு. (C-1327)

தொடர்புகட்கு : 077 723 2535


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றச்சாட்டு விசாரணைக்கு அநுர அரசாங்கத்தை வலியுறுத்துங்கள்!

## ஜெய்சங்கரிடம் கோரிக்கை



(கொழும்பு)

**இலங்கையில் புதிதாக ஆட்சி அமைத்துள்ள அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்தை போர்க்குற்ற விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைக்குமாறு வலியுறுத்த வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.**

இந்தியாவின் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் எஸ். ராமதாஸ், அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.


நாளை வெள்ளிக்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையிலேயே ராமதாஸ் தமது எக்ஸ் தளத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் இந்த விஜயம் இலங்கைத் தமிழர்களுக்கு பயனும் அதிகாரமும் அளிக்கும் வகையில் அமைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைகின்ற போதிலும், போர்க் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் இதுவரை தண்டிக்கப்படவில்லை. அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தின்படி தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ள போதிலும் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

எனவே, மாறிமாறி ஆட்சி செய்த பாரம்பரிய கட்சிகள் அல்லாத கட்சியைச் சேர்ந்த ஒருவர் தற்போது ஆட்சிக்கு வந்துள்ளார். ஆகையால், பிரிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைத்து தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் இலங்கை ஜனாதிபதியிடம் முன்வைக்க வேண்டும்.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைக்குமாறு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கத்திடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)



## திலித்துடன் இணைந்தார் ரொஷான்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க, தொழிலதிபர் திலித் ஜயவீர தலைமையிலான மௌபிம ஜனதா கட்சியில் இணைந் துள்ளார்.

கட்சியின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண கட்சியின் உப தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மிலன் ஜயதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

## பிரதமரை சந்தித்தார் இந்திய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இலங்கைப் பிரதமர் ஹரினி அமர சூரியவை சந்தித்துப் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் சமூக ஊடக பதிவில் இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இலங்கை மக்களுக்கான இந்தியாவின் நிலையான அர்ப்பணிப்பு குறித்து இச்சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டதுடன் பன்முக இரு தரப்பு உறவுகளின் முன்னேற்றத்தை துரிதப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (நி)


# மரண அறிவித்தல்

## அமரர்.வைத்திலிங்கம் தில்லைநடராஜன் (தில்லை)

(ஓய்வு பெற்ற நில அளவையாளர்,EMSO Limited, Geographic Information Systems (GIS) Consultant)



மலர்வு - 21.03.1945 உதிர்வு - 29.09.2024

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், கொழும்பு , சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தில்லைநடராஜன் (ஓய்வு பெற்ற நில அளவையாளர், EMSO Limited, Geographic Information Systems (GIS) Consultant) (GIS) Consultant) அவர்கள் 29-09-2024 ஞாயிற்றுக்கிழமை அன்று சாவகச்சேரியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் கனகாம்பிகை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் சிவஞானவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற யோகராணி (புஸ்பம்) அவர்களின் அன்புக் கணவரும், சுபோதினி (லண்டன்), பாமினி (லண்டன்), அஜந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிஸ்கந்தராஜா (லண்டன்), மனோகரன் (லண்டன்), ஜெயராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வசந்தநாயகி (சாவகச்சேரி), பத்மசேனன் (கனடா), காலஞ்சென்ற மனோகரி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற ராஜசங்கரி மற்றும் தங்கராணி (கனடா), காலஞ்சென்ற மகாதேவன், காலஞ்சென்ற ஆனந்தநடேசன் - சுகுனாம்பிகை (கனடா), விமலாராணி - சண்முகதேவன் (நீர்வேலி), காலம்சென்ற இந்திராணி - சுகுனாநந்தன் (கனடா), ஜெயராணி - உமாபதிசிவம் (ஜேர்மனி), அருமைநாதன் - கிருபானந்தி (கனடா), இராசேந்திரம் - சரோஜினிதேவி (ஜேர்மனி), செல்வராணி - பாலசிங்கம் (நீர்வேலி), பத்மராணி - குகராஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், செந்தில்குமார், ஜானகி, முரளினி- முரளிதரன், நடனதேவன் - தீபா, துவாரகன் -டயானா ஆகியோரின் மாமனாரும், உஷா, கோபகன் ஆகியோரின் பெரியப்பாவும், சாருஜன், கிருஜன், தீபனா, தீபிகா, சாரங்கன், சிறிரங்கன், அபிஷா, கோகிலவதனன், கோகில்ராஜ், விதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03-10-2024 இன்று வியாழக்கிழமை இலக்கம் 3 கற்குழி ஒழுங்கை, தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரி இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகன கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(c-1322)

சாவகச்சேரி.

தொடர்புகளுக்கு: சுபோதினி - மகள் +44 7984 488266 | பாமினி - மகள் +44 7975 853181 | அஜந்தன் - மகன் +16 477 7967991

தகவல் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்


## தலைவர் பதவியிலிருந்து பாபர் அசாம் இராஜினாமா

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் ஒயிட்-போல் தலைவர் பதவியில் இருந்து பாபர் அசாம் இராஜினாமா செய்துள் ளார்.

தனது எதிர்கால கிரிக் கெட் நடவடிக்கையில் அதீத கவனம் செலுத்த வுள்ள மையினால் இந்தத் தீர்மா னத்தை மேற்கொண்ட தாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி முல்தானில் தொடங் கும் இங்கிலாந்துக்கு எதிரான பாகிஸ்தானின் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கு ஒரு வாரத் திற்கு முன்பு பாபர் ஆசா மின் இராஜினாமா வந் துள் ளது. பாகிஸ்தான் அடுத்த மாதம் ஒயிட்-போல் தொட ருக்காக அவுஸ் திரேலி யாவுக்கு சுற்றுப் பயணம் மேற் கொள்கிறது. அங்கு பாபர் அசாம் அணியை வழிநடத்தவிருந்தார்.

எனினும், அவரின் அண்மைய முடிவினால்



இப்போது பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் (PCB) புதிய தலைவரை நியமிக்க வேண்டியுள்ளது. இந்த ஆண்டு மே மாதம் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவராக பாபர் அசாம் நியமிக்கப்பட்டார்.

2019 ஆம் ஆண்டு முதன் முதலில் தலைவராக நியமிக் கப்பட்டதில் இருந்து 20 டெஸ்ட், 43 ஒருநாள் மற்றும் 85 ரி-20 போட்டிகளில் பாகிஸ்தான் அணியை பாபர் அசாம் வழி நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 120 | 150 | 100-130 | 160 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 200-280 | 300 |
| தக்காளி | 350 | 300 | 250 | 200 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 300 | 200 | 150-200 | 200 |
| கோவா | 350 | 300 | 300 | 250 | 300 |
| கரட் | 200 | 200 | 250 | 250 | 250 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 80 | 140 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 180 | 180 | 200 | 200-220 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 250 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 280 | 200 | 250 | 280 | 350 |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 350 | 600 |
| வெண்டக்காய் | 200 | 120 | 100 | 80-120 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 250 | 150 | 250 |
| பயற்றங்காய் | 350 | 350 | 400 | 200-250 | 400 |
| லீக்ஸ் | 320 | 300 | 260 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | 150 | 200 | 80-140 | 200 |
| கறிமிளகாய் | 400 | 400 | 700 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 700 | 450 | 500 | 200-250 | 400 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 240 | 400 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 200 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 150 | 100 | 100 | 80 | 150 |
| தேசிக்காய் | 400 | 400 | 500 | 300-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 150 | 130 | 80-150 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 500 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 100 | 170 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 100 | 100 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 130 | -- | 50 | -- | 160 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3234

மிதுஷா




சஜந்தினி




பிரகாஷ்





சாத்வீகா




ஆனந்தி




கீர்த்தனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் நம்பிக்கையை பெற விரும்பின் சிங்கள பௌத்த தேசியவாதிகளை கவருவதை ஜனாதிபதி கைவிட வேண்டும்-அம்பிகா சற்குணநாதன்

**(கொழும்பு)**

**தமிழர்களின் நம்பிக்கையை பெற விரும்பினால் சிங்கள பௌத்த தேசியவாதிகளை கவரும் முயற்சிகளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கைவிடவேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



சமூக ஊடகப் பதிவில் இதனைத் தெரிவித்துள்ள அவர் கடும் போக்குடைய சிங்கள பௌத்த தேசிய வாதிகளைக் கவரும் முயற்சியில் ஈடுபட்டால் தேசிய மக்கள் சக்தி புதிய ராஜபக்சாக்களாக மாறும் என தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஜனாதிபதி வெற்றியடைய வேண்டும். தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்ற பெரும்பான்மை கிடைக்கவேண்டும் என நான் விரும்புகின்றேன்.

அது நடைபெறாவிட்டால் கூட்டணி அரசாங்கமே ஒரேயொரு சாத்தியப்பாடாக இருக்கும்.

தேசிய மக்கள் சக்தி எந்த கட்சியுடன் கூட்டணி அமைக்கும் என என்னால் ஊகிக்க முடியாது.

மகிழ்ச்சியும் நம்பிக்கையும் தவறுகள் இழைக்கப்படுவதை தூண்டுகின்றன.

நல்லாட்சியில் இடம்பெற்ற விடயங்கள் மீண்டும் இடம்பெறாமலிருப்பதற்காக விமர்சனங்களை முன் வைக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது.

பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற சிங்கள வாக்காளர்களை கவர வேண்டும் என தேசிய மக்கள் சக்தி நினைப்பதை நான் புரிந்து கொள்கின்றேன்.

ஆனால் தேசிய மக்கள் சக்தி மூலோபாய ரீதியில் செயற்பட வேண்டும்.நம்ப வைக்கக்கூடியவற்றில் மாத்திரம் கவனம் செலுத்த வேண்டும்.

ஜனாதிபதிக்கு வாக்களித்தவர்கள் தேசிய மக்கள் சக்தி வித்தியாசமானது என கருதுபவர்கள் விலகிச் செல்லும் நிலையை ஏற்படுத்தக்கூடாது.

கடும் போக்குடைய சிங்களப் பௌத்த தேசியவாதிகளை வசீகரித்தால் தேசிய மக்கள் சக்தி புதிய ராஜபக்சாக்களாக மாறும்.

வித்தியாசமானதாக அல்லது சிறுபான்மையினத்தவர்கள் நம்பக்கூடிய சக்தியாக விளங்காது.

சிவில் சமூகத்தின் சில பிரிவினர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை விமர்சிக்கக் கூடாது. அது அவரை பலவீனப்படுத்தும் அவருக்கு கால அவகாசத்தை வழங்க வேண்டும். இவர்கள் அவர்களின் தவறுகளை நியாயப்படுத்துகின்றனர்அல்லது அலட்சியம் செய்கின்றனர்.

நல்லாட்சி அரசாங்கத்தை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தத் தவறியதன் காரணமாகவே ராஜபக்சாக்கள் மீண்டும் துரிதமாக ஆட்சிக்கு வரமுடிந்தது.

அதிகாரத்திற்கு நெருக்கமாயிருப்பதை மாத்திரம் முக்கிய பரப்புரை தந்திரோபாயமாக கொண்டிருக்கும் சில சிவில் சமூகத்தினர் எவ்வாறான அடுத்த கட்ட நடவடிக்கையில் ஈடுபடுவது என்பதை தீர்மானிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றனர்.

இது அனைத்தையும் உடனடியாக மாற்றமுடியாத இடைக்கால அரசாங்கம் என்பதை ஜனாதிபதியும் அரசாங்கமும் உணர்ந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. அதற்கு மக்கள் ஆணையில்லை. மேலும் அது மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய குழப்பங்களை உருவாக்கலாம் என அவர் தெரிவித்தார். (நி)

---

# இராசிபலன்

03.10.2024
புரட்டாதி 17, வியாழக்கிழமை
பிரதமை பின்னிரவு 2.21 மணிவரை
அத்தம் பிற்பகல் 4.07 மணிவரை

சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் -1.32- 3.02 மணிவரை
நவராத்திரி விரதாரம்பம்

சந்திராஷ்டமம்.
அவிட்டம், சதயம்

**வளவன்**

**மேஷம்** – பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமை அடைவீர்கள், கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்கள் நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும்.

**துலாம்** – காரிய வெற்றிக்கு அம்பிகையை வழிபட வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கும் நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**மகரம்** – பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பகையொன்று நட்பாகலாம், கூட்டு முயற்சி வெற்றி தரும்.

**ரிஷபம்** – பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழில் வளர்ச்சி உண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்** – நினைத்தது நடந்து சந்தோசம் கிடைக்கும் , வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழில் வளர்ச்சி உண்டு, பணப்புழ--க்கம் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** – உள்ளம் மகிழும் செய்தி ஒன்று வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில பூர்த்தியாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்** – பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பயணத்தில் மன உளைச்சல் ஏற்படலாம், காரிய வெற்றிக்கு அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** – புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**கன்னி** – குடும்பத்தினர் மனங் கோணாது நடந்து கொள்வது நல்லது, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** – பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கௌரவமான நாள்.

**மீனம்** – நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், குடும்பப் பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**வெற்றியின் சிறந்த பயன் மன்னித்தலே ஆகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் மகாத்மா காந்தியின் 155 ஆவது ஜனன தின நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தியின் 155 ஆவது பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வு யாழில் இடம் பெற்றது.

யாழ். வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இந்திய துணைத் தூதர் சாய் முரளி, வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் சி.சிறிசற்குணராஜா,

யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ். மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், யாழ். பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சமய சமூக பிரதி நிதிகள், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்க பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது காந்தீயம் ஏடு வெளியிட்டு வைக்கப்பட்டு அதன் பிரதிகள் அனைவருக்கும் வழங்கி வைக்கப்பட்டது. (6-33)



# சுற்றி வளைக்கப்பட்ட உணவகங்கள்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் அமைந்துள்ள உணவகங்கள் மீது நேற்று திடீர் சுற்றி வளைப்பு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு நகரில் அமைந்துள்ள உணவகங்கள் மீது புதுக்குடி யிருப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக் களத்தினர், சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து திடீர் சுற்றி வளைப்பு ஒன்றினை மேற்கொண்டிருந்த வேளை சில உணவகங்களில் காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டிருந்தது.

அதனையடுத்து அக் கடைகளுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்படவுள்ளதுடன் இரண்டு உணவகங்கள் மூடி கடைகளினுடைய சிறுசிறு வேலைகளை மேற்கொண்ட பின்னர் கடைகளைத் திறந்து நடத்த முடியும் எனவும் உணவக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

உணவக சுற்றி வளைப்பு பரிசோதனை நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பி.சத்தியரூபன் தலைமையில் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்டிருந்தார்கள். (6-299)

## யாழ்.பல்கலையில்

# 5ஆவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பொன்விழா நிகழ்வு வரிசையில் யாழ்.பல்கலைக்கழக சர்வதேச ஆய்வாளர்களின் ஒரு பகுதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தனது 5 ஆவது அனைத் துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டை அதன் பொன் விழா ஆண்டில் 'இருபதாம் நூற்றாண்டு ஈழத் துத் தமிழ் இலக்கியம்: இலக்கியத்தினூடான மானுட விடுதலை' எனும் தொனிப் பொருளில். முன்னெடுக்கவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கிருஷ்ண பிள்ளை விசாகரூபன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

1 ஆம் நாள் நிகழ்வில் ஆய்வுக் கட்டுரைகள், மூத்த படைப்பாளுமைக்கான கௌரவித்தல் நிகழ்வும் எதிர்வரும் 8 ஆம் திகதி 2 நாள் நிகழ்வுகளாக முப்பெரும் விழா மற்றும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## பழுதடைந்தவற்றை சீர் செய்து தாருங்கள்

### நெல்லியடி மக்கள்– கோரிக்கை

(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில் சி.சி.ரி.வி கமரா மற்றும் மணிக்கூடு என்பன இரண்டு வருடங்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது எனவும் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள மலசல கூடமும் பொதுமக்கள் பாவிக்க முடியாமல் பழுதடைந்த நிலை யிலும் காணப்படுகின்றது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு தகவல் வழங்கப்பட்ட போதும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் அதிகாரிகளை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6)

# வடமாகாண சுற்றுலாத்துறை விரிவுபடுத்தல் தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் ஆளுநர் செயலகத்தில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் மூலமாக வட மாகாண மக்கள் அதிகளவு வருமானத்தை ஈட்டுவதற்கு சாதகமான நடவடிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது கருத்துத் தெரிவித்த ஆளுநர், சுற்றுலாத் துறையை பிரதேசங்களின் தன்மையை ஆராய்ந்து அபிவிருத்தி மேற்கொள்ளுமாறும் சுற்றுலாத்துறையின் விரிவாக்கம் மேற்கொள்ளும் பிரதேசங்களுக்கு ஏற்ற வகையில் மரநடுகை தொடர்பாகவும் முக்கியமான விடயங்களை தெரிவித்தார். அத்துடன் விரைவாகவும் வேகமாகவும் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும் எனவும் பணிப்புரைவிடுத்தார் (6-33)

# க.பொ.த சா/த பரீட்சை பெறுபேறுகள்-2023

## சென்.பற்றிக்ஸ்கல்லூரியில் 9 பேர் 9'ஏ' சித்தி

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரண தர 2023 பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் 9 பேர் '9ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இவர்களில் தமிழ்மொழி மூலம் 5 மாணவர்களும் ஆங்கிலமொழி மூலம் தோற்றிய 4 மாணவர்களும் 9 பாடங்களிலும் 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் 8ஏ சித்திகளை 6 மாணவர்களும் 7ஏ சித்திகளை 6 மாணவர்களும் 6ஏ சித்திகளை 7 மாணவர்களும் 5ஏ சித்திகளை 9 மாணவர்களும் பெற்றுள்ளனர். அதேவேளை க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய 150 மாணவர்களில் 139 பேர் சித்தியடைந்துள்ளனர். (6

## ஹாட்லிக் கல்லூரி 32 பேர் 9'ஏ' சித்தி

(கரணவாய்)

வெளியாகியுள்ள க.பொ.த சாதாரண தர 2023 பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் 32 பேர் '9ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

தமிழ்மொழியில் 17, ஆங்கில மொழியில் 15 என தோற்றிய 32 மாணவர்கள் '9ஏ' பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.

அதேவேளை தமிழ் மொழியில் 20, ஆங்கில மொழியில் 8 என தோற்றிய 28 மாணவர்கள் 8 பாடங்களில் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

குறித்த பரீட்சைக்கு ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் 154 பேர் தோற்றியுள்ள நிலையில் அத்தனை பேரும் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-60

## மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை- 26 பேர் 9'ஏ' சித்தி

(கரணவாய்)

வெளியாகியுள்ள க.பொ.த சாதாரண தர 2023 பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவர்கள் 26 பேர் 9 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

அதேவேளை பெறுபேறுகளான 8 'ஏ' 'பி' -19, 8 'ஏ' 'சி' -8, 7 'ஏ' 2'பி'-12 மற்றும் 7'ஏ' 'பி' 'சி'- 5 என குறித்த மாணவிகள் சித்தியெய்தினர். (6-60)

## புதுக்குடியிருப்பு இரணைப்பாலை றோ.க பாடசாலை 4 பேர் 9'ஏ' சித்தி

(நெளுக்குளம்)

வெளியாகியுள்ள க.பொ.த. சாதாரண தர பரீட்சை 2023 பெறுபேறுகளில் புதுக்குடியிருப்பு இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் 4 பேர் 9 'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இவ்வருடம் 33 மாணவர்கள் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அதில் 5 மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினையும் ஏனைய 16 மாணவர்கள் உயர்தரத்திற்கும் தகுதி பெற்றுள்ளனர். (6-299)



யாழ்.தீவக கல்வி வலயத்திற்குட்பட்ட நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் 'பிள்ளைகளைப் பாதுகாப்போம் சமமாக மதிப்போம்' எனும் தொனிப்பொருளில் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைவோம்

## சஜித் பிரேமதாச அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற தரப்பை போலவே தோல்வியுற்ற தரப்புக்கும் நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து கட்டியெழுப்பும் பொறுப்பு உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்களுடன் மஹரகம பகுதியில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றி பெற்றவர்களிடம் மட்டும் பொறுப்புகளை ஒப்படைப்பது வங்குரோத்தான நாட்டுக்கு ஏற்புடையதல்ல. இதற்காக அனைவரும் கைகோர்க்க வேண்டும்.

நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தில் எதிர்க்கட்சி முன்னோடியான வேலைத்திட்டத்தைக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து பின்வாங்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அதேநேரம் கடினமான சூழ்நிலையில், பழமைவாத முறைகளுக்குச் செல்லாமல், புதிய வழிமுறைகளைக் கண்டறியும் திட்டத்திற்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் விமர்சனங்களோடு மாத்திரம் மட்டுப்பட்டு விடக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# அதிக கட்டணம் அறவிடும் பேருந்துகளை முறையிட 1955

(கொழும்பு)

பயணிகளிடமிருந்து அதிக கட்டணம் அறவிடும் பேருந்துகள் தொடர்பில் முறையிடத் தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 4.24 சதவீதமாக பேருந்து கட்டணம் குறைக்கப்பட்டிருந்த நிலையில் ஆரம்ப கட்டணம் 27 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில், நிர்ணயிக்கப்பட்ட பேருந்து கட்டணத்தை விட அதிக கட்டணம் அறவிடும் பேருந்துகள் தொடர்பில் முறையிட 1955 அல்லது 071 25 95 555 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக கட்டணம் அறவிடும் பேருந்துகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (நி)


**வைத்தியம்**

வலிப்பு நோய் | கை விறைப்பு | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால் வலி Sciatica | நாட்பட்ட சளி | தலைக்கு இரத்தம் போகாமை

அதி விசேட மூலிகை, Acu சிகிச்சைகள்

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

(சி-2461) தொடர்புகளுக்கு : 0777 301 669



**யாழ்.நகரில் அமைந்துள்ள ஆர்.வி.ஜி பீடி கம்பனிக்கு வேலையாட்கள் தேவை**

01. சாரதி (AD Licence). (21- 45 வயதிற்குட்பட்ட ஆண்கள்)
02. இரவு நேர காவலாளி (21- 45 வயதிற்குட்பட்ட ஆண்கள்)

**தகைமைகள் :** முன்பு வேலை செய்த அனுபவம் மற்றும் வேலை செய்த இடத்தின் சான்றுப்பத்திரம், வதிவிடத்தை உறுதிப்படுத்தல் சான்றிதழ்

ஆர்.வி.ஜி பீடிகளை எமது ஸ்தாபனத்தில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

கீழ் காணும் முகவரிக்கு நேரில் வரவும்

(2183)

ஆர்.வி.ஜி பீடி கம்பனி இல. 58 குருக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 0212224766, 0212226806


# தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தே தீருவோம்!

## புதிய அரசாங்கம் வாக்குறுதி

(கொழும்பு)

**தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தே தீருவோம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு கூறினார்.

"சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். அந்த வகையில் சில சட்டச் சிக்கல்கள் உள்ளன. அந்த விடயம் தொடர்பில் நீதி அமைச்சின் ஊடாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். என மேலும் அவர் தெரிவித்தார் . (நி)

# இலங்கையுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்த தயார்

## அவுஸ்திரேலியா உறுதி

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பால் ஸ்டீபன்ஸ்க்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று கொழும்பில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இங்கு அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதிக்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் இலங்கையுடனான தற்போதைய உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த சந்திப்பில், கடல் பாதுகாப்பு, எல்லைக் கட்டுப்பாடு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு முயற்சிகள் உள்ளிட்ட முக்கிய துறைகளில் அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் என உயர்ஸ்தானிகர் உறுதியளித்தார். (நி)

# எரிபொருள் கையிருப்பு ஏப்ரல் வரை போதுமானது

## கனியவள கூட்டுத்தாபனத் தலைவர்

(கொழும்பு)

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லை என்று இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தின் தலைவர் டீ.ஜே. கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார். தற்போது நாட்டில் இருக்கும் எரிபொருள் கையிருப்பானது எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரையிலும் போதுமானதாகும்.

அத்துடன் அடுத்தகட்ட எரிபொருள் கையிருப்புக்கான ஆணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)


**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்**

**முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்**

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபத்தில் (ASR WEDDING HALL) உங்கள் பிள்ளைகளின் திருமணம், பூப்புனித நீராட்டு விழாக்கள், கிறிஸ்தவ பதிவுத் திருமணங்கள், பிறந்தநாள் கொண்டாட்டம், பாடசாலை நிகழ்வுகள், அரச மற்றும் நிறுவனங்களின் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள் செய்ய விரும்புவோர்கள் பதிவுகளை மேற்கொள்ள நாட வேண்டிய மண்டபம் அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்.

சனி, ஞாயிறு தினங்களில் 9 மணி முதல் 4.30 மணிவரை மண்டபத்தை பார்வையிடலாம்.

(2184)

இல. 542, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


தொலைபேசி எண் 021 222 1355 021 222 1356


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# நடுவானில் 4 மணிநேரம் வட்டமடித்த விமானம்

## தப்பினார் பிரேசில் ஜனாதிபதி



(மெக்சிகோ)

மெக்சிகோவில் பிரேசில் ஜனாதிபதி லூலா பயணித்த விமானம் தொழில்நுட்பக்கோளாறு காரணமாக 4 மணி நேரமாக வானில் வட்டமடித்தது. பின்னர் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது.

மெக்சிகோவின் புதிய ஜனாதிபதி பதவியேற்பு விழா நடந்தது. இந்த விழாவில் பங்கேற்க பிரேசில் லூலாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவரும் விழாவில் பங்கேற்க மெக்சிகோ சென்று இருந்தார். கிளாடியா ஷீன்பாம் பதவியேற்றதைத் தொடர்ந்து, லூலா மீண்டும் பிரேசில் புறப்பட்டார்.

மெக்சிகோ நகரத்தை விட்டு வெளியேறிய பிறகு, பிரேசில் ஜனாதிபதி வந்த விமானம் தொழில்நுட்ப சிக்கலை எதிர்கொண்டது.

மணிக்கணக்கில் விமானம் வானில் வட்டமிட்டது. அனுபவம் மிகுந்தவரான விமானி, விமானத்தில் இருந்த அதிகபடியான எரிபொருளை தீர்ப்பதற்காக இவ்வாறு வட்டமடித்தார்.

நான்கு மணி நேரம் விமானம் வட்டம் அடித்த நிலையில் பெருமளவு எரிபொருள் காலியானது.

இதன் பிறகு விமானம் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டதை பிரேசில் விமானப் படை உறுதி செய்தது. பிரேசில் ஜனாதிபதி லூலாவுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. அவர் பாதுகாப்பாக உள்ளார். "நாங்கள் தரையிறங்கினோம், அனைவரும் நலமாக உள்ளோம்" என பிரேசிலின் பத்திரிகை செயலாளர் ஜோஸ் கிறிஸ்பினியானோ தெரிவித்தார். (நி)

# 400 ஏவுகளை

# பழிதீர்க்க துடிக

(டெஹ்ரான்)

**இஸ்ரேல் மீது நேற்று முன்தினம் இரவு சுமார் 400 ஏவுகணைகளை வீசி ஈரானின் அதிரடியான பதிலடித் தாக்குதலில் இஸ்ரேலின் பல முக்கிய பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

இஸ்ரேல் முழுவதும் எச்சரிக்கை சைரன்கள் ஒலித்துள்ளதாகவும் சுமார் 180 ஏவுகணைகள் ஈரானில் இருந்து இஸ்ரேலை நோக்கி ஏவப்பட்டதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலுக்கு பின் விளைவுகள் இருக்கும் என இஸ்ரேல் இராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி தெரிவித்தார்.

எனினும் தம்மால் ஏவப்பட்ட 90% ஏவுகணைகள் இலக்குகளை சரியாக தாக்கியிருப்பதாக ஈரான் அறிவித்துள்ளது.

இதற்கு இஸ்ரேல் பதிலடி கொடுத்தால் மற்றொரு தாக்குதல் நடைபெறும் எனவும் ஈரான் எச்சரித்துள்ளது.

லெபனான் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திய இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் இந்தத் தாக்குதலை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜுலை மாதம் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனிய மற்றும் கடந்த வெள்ளிக்கிழமை ஹிஸ்புல்லா தலைவர் ஹசன்

# பதில்தாக்குதல் மேற்கொண்டால் உட்கட்டமைப்புகளையும் தாக்குவோம்!

## இஸ்ரேலை எச்சரிக்கும் ஈரான்



(டெஹ்ரான்)

இஸ்ரேல் பதிலடி கொடுத்தால் அதன் அனைத்து உட்கட்டமைப்புகளையும் இலக்கு வைப்போம் என ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரானின் ஆயுதப்படையின் கூட்டு தளபதி மேஜர் ஜெனரல் முகமட் பகேரி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இஸ்ரேல் இந்த குற்றங்களைத் தொடர முயன்றால் எங்கள் இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்கு எதிராக ஏதாவது செய்ய முயன்றால் நடவடிக்கையை மேலும் பல மடங்கு வலுவான விதத்தில் முன்னெடுப்போம்.

இஸ்ரேலின் அனைத்து உட்கட்டமைப்பும் இலக்கு வைக்கப்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

ஈரானின் புரட்சிகர காவலர் படையணி ஏவுகணைத் தாக்குதலை மேலும் தீவிரமாக முன்னெடுப்பதற்கு தயார் படுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# தவறிழைத்துவிட்டது பதிலடி விரைவில் தர

## நெதன்யாகு எச்சரி

(டெல் அவிவ்)

இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தி ஈரான் மிகப்பெரிய தவறை செய்துவிட்டதாகவும், இதற்கு தக்க பதிலடி தரப்படும் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ஈரான் இஸ்ரேலை நோக்கி 400 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை டெல் அவிவ், ஜெருசேலம் நகரத்தின் மீது ஏவியது.

உடனடியாக செயற்பட்ட இஸ்ரேல், தங்கள் குடிமக்களை சைரன்களை எழுப்பியும், குறுஞ்செய்திகளை அனுப்பியும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தியது. தற்போது லட்சக்கணக்கான இஸ்ரேலியர்கள் பாதுகாப்பான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.




ஈரானின் ஏவுகணைத் தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேலின் வான்வெளிப் பாதுகாப்பு அமைப்புகள் எல்லைகளை தீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...கணைகள்
# ...க்கும் ஈரான்!



...ம் வகை
...தத் தாக்
...ண்டு வரு
...கப்படுகி

...ஹமாஸ்
...ம்மாயில்
... கடந்த
...ம ஹிஸ்
...ஹசன் நஸ்ரல்லா ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதற்கும் பாலஸ்தீன, லெபனான் மக்கள் கொல்லப்பட்டதற்கும் பதிலடியாக இந்த ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதாக புரட்சி கர காவற்படை. தெரிவித்துள்ளது. (நி)

# ...டது ஈரான்
# ...தரப்படும்!

## ...சரிக்கை




...வக் ...ரமாக கண்காணித்து வருகின்றன.

...க்கு ...ரே ...ப்பு ...தீவி ஏவுகணை தாக்குதலுக்கு விரைவில் தக்க பதிலடி தரப்படும் எனவும் இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி)

## இஸ்ரேல் மீதான தாக்குதல் மகிழ்ச்சியில் ஈரானிய மக்கள்





(டெஹ்ரான்)

இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டதை ஈரானிய மக்கள் வீதிகளில் இறங்கி கொண்டாடி வருகின்றனர்.

ஈரான் ஹிஸ்புல்லா கொடிகளுடன் வீதியில் இறங்கிய பெருமளவு மக்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர். இஸ்ரேலில் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹிஸ்புல்லா தலைவரின் படங்களுடன் அவர்கள் காணப்படுகின்றனர்.

சில இடங்களில் வெடிகளை கொழுத்தி மக்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் படங்கள் வெளியாகியுள்ளன. பிரிட்டனின் தூதரகத்திற்கு வெளியே பெருமளவு மக்கள் திரண்டுள்ளனர். (நி)

## ஈரான்-இஸ்ரேல் மோதல் ஐ.நா கடும் கண்டனம்



(ஜெனீவா)

இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ், ஜெருசலேம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஈரான் ஏவுகணை தாக்குதலை நடத்தி வருவதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஈரானில் இருந்து பாலிஸ்டிக் ஏவுகணைகள் இஸ்ரேல் மீது ஏவப்பட்டுள்ளன. இதனால் ஏவுகணை தாக்குதலை குறிக்கும் வகையில் இஸ்ரேலில் சைரன்கள் ஒலிக்கப்பட்டு வருகின்றன. பொது மக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். இதனால் மத்திய கிழக்கில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினர் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் ஈரான் இந்த பதிலடி தாக்குதல் நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் மத்திய கிழக்கு நாடுகளில் தீவிரமடையும் மோதல்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், "மத்திய கிழக்கு மோதல்கள் தீவிரமடைந்த பிறகு விரிவடைவதை நான் கண்டிக்கிறேன். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். எங்களுக்கு முற்றிலும் போர் நிறுத்தம் தேவை" என்று அதில் அன்டோனியோ குட்டரெஸ் பதிவிட்டுள்ளார்.

தனது மற்றொரு பதிவில் "லெபனானில் மோதல்கள் தீவிரமடைந்து வருவதைப் பற்றி நான் மிகவும் கவலையடைகிறேன். உடனடி போர் நிறுத்தத்திற்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

லெபனானில் போர் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். லெபனானின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு மதிக்கப்பட வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## ஹெலிகொப்டர் விபத்து மூவர் உயிரிழுப்பு



(டில்லி)

மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் உள்ள பாவ்தான் பகுதியில் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை காலை 7 மணியளவில் நடந்ததாக புனே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த ஹெலிகொப்டர் டில்லியை சேர்ந்த ஹெரிடேஜ் ஏவியேஷன் என்ற தனியார் நிறுவனத்திற்கு சொந்தமானது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்துக்கான உறுதியான காரணம் கண்டறியப்படாத நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கரப்பந்தாட்ட அணி வரலாற்றுச் சாதனை



ச.அபிசரண்
மூன்றாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக் கழகம்.

2024 ஆம் ஆண்டு பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந் தாட்டப் போட்டியிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கரப்பந்தாட்ட அணி ஆனது இறுதிச்சுற்றுவரை முன்னேறி இரண்டாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. இது யாழ்.பல் கலைக்கழக கரப்பந்தாட்ட வரலாற்றில் மிகப் பெரிய தொரு சாதனையாகும். அதாவது இதுவரை காலமும் யாழ்.பல்கலைக் கழகமானது கரப்பந்தாட்ட போட்டி யிலே இறுதிவரை செல்லாத நிலையே காணப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக கழக வரலாற்றிலே ஆரம்ப காலங்க ளில் கால்இறுதிக்கு முன்னேறியதே அதிகபட்சமான உயர்வு மட்டமாக காணப்பட்டது.

ஆனால் தற்பொழுது கடந்த சில ஆண்டுகளாக அரை இறுதிக்கு முன் னேறி ஒரு வலுவான அணியாக காணப்பட்டது. அதாவது 2022ஆம் ஆண்டு அரை இறுதி ஆட்டத்திலே University of kelaniya அணி யினைச்சந்தித்து அதில் தோல்வி யுற்று மூன்றாம் இடத்துக்கான போட்டி யிலே Wayamba university of sri lanka அணியினை சந்தித்து அதிலே வெற்றி பெற்று மூன்றாம் இடத்தினை பெற்றுக் கொண்டனர்.

2023 ஆம் ஆண்டு Sabraga muwa university of Srilanka அணியுடன் அரையிறுதியில் மோதி அதிலே தோல்வியுற்று மூன்றாம் இடத்திற்கான போட்டியிலே Uni versity of kelaniya உடன் மோதி அதிலும் தோல்வியுற்று நான்காம் இடத்தினை பெற்றுக் கொண்டனர்.

ஆனால் இவ் வருடம் 2024 அரையிறுதி ஆட்டத்திலே Waya mba university of srilanka அணியுடன் மோதி 3:0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு முன்னேறி யாழ்ப்பாண பல் கலைக்கழகத்தின் கரப்பந்தாட்ட வரலாற்றிலே முதல் முதலில் இறு தியாட்டத்திற்குச் சென்று சாதனையும் படைத்தனர். இறுதியாட்டத்திலே மிகப் பலம் பொருந்திய அணியான university of kelaniya இனை சந்தித்து மிகவும் பலத்த போராட் டத்தின் மத்தியிலே 5 செட் களை கொண்ட இறுதிப் போட்டியிலே 3:2 என்ற செட் கணக்கில் தோல்வியுற்று இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்டது.

இவ் அணிக்கு பயிற்சிவிப்பாளராக இருந்த சிவப்பிரகாசம் ரஞ்சித் குமார் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலே கல்வி கற்று பல்வேறு விளையாட்டு துறைகளில் தன்னை ஈடுபடுத்தி தற் பொழுது யாழ்.பல்கலைக்கழக கரப்பந் தாட்ட அணியில் பயிற்றுவிப்பாளராக கடமை ஆற்றிவருகின்றார். சிவப் பிரகாசம் ரஞ்சித்குமார் இது தொடர்பாக தெரிவிக்கையில், ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை பொறுத்தவரையில் indoor stadium வசதிகள் இல்லாதிருந்தது.

ஆனால் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட போட்டி யானது indoor stadium இல் நடைபெற்று வந்தது. யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தினைப் பொறுத்த வரையில் திறமையான வீரர்கள் இருந்தும் அவர்களால் indoor இல் தமது திறமைகளை வெளிப்படுத்த முடியாத நிலை காணப்பட்டது. ஏனெனில் வெளியக கரப்பந்தாட்ட மைதானத்திற்கும் உள்ளக கரப்பந் தாட்ட மைதானத்திற்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டது.

மேலும் வெளியகம், உள்ளகத் திற்கான கரப்பந்தாட்டத்தின் பந்தும் வேறுபட்டு காணப்பட்டது. இவ்வாறான வசதிகள் ஆரம்ப காலங்களில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்திற்கு கிடைக் காத வண்ணம் காணப்பட்டது. அது மாத்திரமன்றி உள்ளகம்,வெளியகம் என்பவற்றுக்கு இடையிலே lighting வேறுபாடும் பந்து செல்வதற்கான வேக வேறுபாடும் இருந்தது. ஆகையால் பல்கலைக்கழகங்களுக்கு இடையி லான போட்டிகளில் யாழ்ப்பாண பல் கலைக் கழகத்தினால் வெற்றி வாகை சூட முடியாத நிலை காணப்பட்டது.

மேலும் அவர் கூறுகையில் காலப் போக்கில் கிளிநொச்சியில் indoor stadium வந்த போது கிளிநொச்சியின் DSO இடம் அணுகி யாழ்ப்பாண பல் கலைக்கழகத்தின் Sport director ஊடாக கடிதத்தினை வழங்கி யாழ்ப் பாண பல்கலைக்கழகத்தின் கரப்பந் தாட்ட அணியின் பயிற்சிகள் அங்கு இடம் பெற்று வந்தது. இருந்த போதும் உள்ளகத்திலே விளையாடுவதற்கான ball கிடைக்கப்படாத வண்ணமே இருந்தது. அதன் பிற்பாடு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் Indoor sta dium வந்ததன் பிற்பாடு உள்ளக விளையாட்டு அணிகளுக்கான வாய்ப்பு அதிகமாக காணப்பட்டது.

ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாண வீரர்கள் மாத்திரம் அணி யிலே இடம் பெற்றிருந்தனர். ஆனால் தற்பொழுது பல்வேறுபட்ட இடங்களில் இருந்து பல்வேறுபட்ட திறமையான வீரர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக கரப்பந் தாட்ட அணியிலே இடம்பிடித்திருக்கின் றனர். அனுபவம் வாய்ந்த வீரர்கள் காணப்படுவதால் அணியின் பலமா னது இன்னும் அதிகரித்துள்ளது. ஆரம்ப காலங்களில் கால் இறுதிக்கு செல்வதே தமக்கு பெரிய சவாலாக இருந்ததாகவும் தற்போது இறுதிப் போட்டிவரை முன்னேறி இருப்பது அனைவரதும் கடின உழைப் பும் எனக் குறிப்பிட்டார்.

2022ஆம் ஆண்டு 3 ஆம் இடம், 2023 ஆம் ஆண்டு 4 ஆம் இடம் அத்தோடு இவ்வருடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கரப்பந்தாட்ட வர லாற்றில் இல்லாத வகையில் இறுதிப் போட்டிக்கு முன்னேறி இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொண்டோம்.







அவர் மேலும் கூறுகையில் இனி வரும் காலங்களில் யாழ்ப்பாணப் பல் கலைக்கழக கரப்பந்தாட்ட அணியானது ஏனைய பல்கலைக்கழக கரப்பந்தாட்ட அணிக்கு ஒரு சவாலான அணியாக திகழும் எனவும் அவர் குறிப்பிட்டு இருந்தார்.

மேலும் இது தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழக கரப்பந்தாட்ட அணித் தலைவரான அருமைநாதன் திருச் செல்வம் அவரிடம் இது தொடர்பாக கேட்டபோது, குறிப்பாக 2024 பல் கலைக்கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட போட்டித் தொடரில் யாழ்ப் பாண பல்கலைக்கழகம் இறுதிப் போட்டி வரை முன்னேறி வரலாற்றுச் சாதனை படைத்திருந்தது. இறுதிப் போட்டியிலே களனி பல்கலைக் கழகத்தை எதிர்த்து கடுமையான சமரினைச் செய்து இறுதி யில் தோல்வி அடைந்து இருந்தாலும் 50 வருடங்களாக பல்கலைக்கழகங் களுக்கு இடையிலான கரப்பந்தாட்ட போட்டியில் வரலாற்றில் முதல் தடவை யாக யாழ்ப்பாண பல்கலைக்கழக இறு திப் போட்டி வரை சென்றது மகத்தான சாதனையாகும்.

குறிப்பாக 2022 ஆம் ஆண்டு யாழ்ப் பாணப் பல்கலைக்கழக கரப்பந்தாட்ட அணி தனது சாதனை பயணத்தை ஆரம்பித்தது. இதில் நாங்கள் முதன் முறையாக மூன்றாவது இடத்தை பெற்றிருந்தோம். அதே சமயம் 2023 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொட ரிலே மிகவும் அபாயகரமான கரப்பந் தாட்ட அணியினர் என அடையாளப்படுத் தப்பட்டிருந்தோம். அதற்கு ஏற்றாற் போல அந்த வருடத்திலேயே அரையிறு திப் போட்டியிலே இலங்கை தேசிய அணியை பிரதிநிதித் துவப் படுத்தி விளையாடு கின்ற வீரர் களை உள் ளடக்கிய சப் ரகமுவ பல் கலைக்கழக த்தை எதி ர்த்து அரை யிறுதிபோட்டி யில் மிக அற்புதமாக விளையாடி யிருந்தாலும் தோல்வி பெற்று நான் காவது இடத்தினைப் பெற்றிருந்தோம். இந்த இரண்டு கடந்த கால அனுப வங்களையும் பெற்றுக் கொண்டு இந்த வருடத்தில் கடுமையான பயிற்சி களைச் செய்து புதிய நுணுக்கங்களை கையாண்டு அணியை சிறப்பான முறையில் கட்டமைத்து புதிய வீரர்க ளையும் உள்வாங்கிக் கொண்டு இறு திப்போட்டி வரை முன்னேறி கிண் ணத்தை மயிரிழையில் தவற விட்டி ருந்தோம்.

அதேவேளை லீக் சுற்றிலே எங்க ளுடைய போட்டிகளை அவதானித்த சிலர் நாங்கள் தான் இந்த முறை சம்பியன் மகுடத்தை சூடுவோம் என கணித்திருந்தனர். ஆனால் அந்த வாய்ப்பை நாங்கள் இழந்து விட் டோம். இருந்தாலும் இந்த வருடம் மிக சிறப்பான அணியாகச் செயற்பட்ட நாங் கள் எல்லா அணிகளுக்கும் சவால் கொடுக்கக் கூடிய வகையில் எங்க ளுடைய திறமைகளை வெளிக்காட்டி இருந்தோம்.

இவ்வாறு நாங்கள் வளர்ச்சியில் சென்றமைக்கு எங்களுக்கு பயிற்சி அளித்த பயிற்சியாளர் சிவப்பிரகாசம் ரஞ்சித்குமார் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரி வித்துக் கொள்வதோடு இவ்வளவு தூரம் இறுதிப்போட்டி வரை தங்க ளுடைய அசாத்திய திறமைகளை வெளிக் காட்டிய எமது அணியின் சக வீரர்களுக்கும் இந்த நேரத்திலேயே நான் நன்றி தெரிவித்துக் கொள் வதில் பெருமிதம் அடைகிறேன். மேலும் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் அளவில் நடைபெற உள்ள இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டி தொடரில் நிச்ச யமாக சம்பியன் மகுடத்தை சூடுவதற்கு கடுமையான முயற்சி செய்வோம்.

இவ் அணியினரது சாதனைப் பய ணம் இன்று பல்கலைக்கழக வரலாற் றில் மாபெரும் சாதனையாக பார்க் கப்படுகிறது. கரப்பந்தாட்ட அணிக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்! உங்கள் கடின உழைப்பு, ஒற்றுமை மற்றும் உறுதிக்கான முயற்சிகளே இத்த கைய வெற்றிக்கு காரணம் மேலும் வெற்றிகள் தொடர வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூழல் நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி...

## யாழில் ஆரம்பமான விவசாயக் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

வட மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் "சூழல் நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி" எனும் தொனிப்பொருளிலான விவசாயக் கண்காட்சி யாழ்.மாவட்ட திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்று ஆரம்பமானது.

குறித்த கண்காட்சியினை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆரம்பித்து வைத்தார். இதன் போது இயற்கை விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறுதானியங்கள், பயிர் உற்பத்திகள் உள்ளிட்ட பல்வேறு வகையான விவசாய செயல்முறைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள், விவசாயிகள் மற்றும் விவசாய நிறுவனங்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

விவசாயத்தை காலநிலைக்கு ஏற்ப கொண்டு செல்வதுடன் விவசாய உற்பத்திகளை விற்பனை செய்கின்ற பொழுது இடைத்தரகர்களின் தலையீட்டைக் கட்டுப்படுத்தி விவசாயிகளுக்கு உற்பத்திக்கேற்ப லாபம் கிடைப்பதற்கு வழிவகை செய்ய முயற்சி செய்ய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகம் இதன்போது கருத்துத் தெரிவித்தார். குறித்த கண்காட்சி நாளை வரை இடம்பெறவுள்ளது. (6-33)

# நுண்கலை மாணவனின் காட்சிப்படுத்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறை மாணவர் அமைப்பின் கலை வட்டம் வழங்கும் "Selfscape of Rinoshan Susiman Exhibition of New media Art" என்னும் தலைப்பின் கீழ் படைப்பாளியான றினோசன் சுசீமன் என்பவரின் காட்சிப்படுத்தல் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலைக்கூடத்தில் ஆரம்பமானது.

சமகாலக் கலைஞரான றினோசன் சுசீமன் என்பவர் இலங்கையின் மட்டக்களப்பினைச் சேர்ந்தவர். அவர் கலையில் புதிய நுட்பங்களைக் கையாண்டு தொழில்நுட்பங்களுடன் இணைந்து புதிய பாணியில் தனது கலை வெளிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்தக் கலைக்கூடாக இன்னுமொரு விதமான ஊடாட்ட வழிமுறையினை பின்பற்றி அந்த வெளிப்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

குறித்த காட்சிப்படுத்தல் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினை இலவசமாக பார்வையிட முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6)

# தர்மமுழக்கம் துடுப்பாட்டச் சமர்

(கிளிநொச்சி)


கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி மற்றும் கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) ஆகிய இருபாடசாலைகளுக்கு இடையிலான தர்மமுழக்கம் துடுப்பாட்டச் சமர் 2024 நாளை கிளி/தருமபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் காலை 9 மணிக்கு தருமபுரம் மத்திய கல்லூரி அதிபர் திருமதி இ.கந்தசாமி தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

குறித்த துடுப்பாட்டச்சமர் நாளை மறுதினம் வரை இடம்பெறவுள்ளது. (6)

# பொதுத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லை

## வினோநோகராதலிங்கம்

(மன்னார்)



வன்னி மாவட்டத்தில் அரசியல் தெளிவுள்ள ஆளுமைமிக்க இளம் தலைவர்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என்ற மக்களினதும் இளைஞர்களினதும் விருப்பங்கள் நிறைவேற எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தெற்கிலே மக்கள் மத்தியில் குறிப்பாக சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியிலே அரசியல் மாற்றம் ஒன்றின் தேவை உணரப்பட்டது.

அதன் விளைவுதான் அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதி யாகியமை. அதைப்போலவே வடகிழக்கில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களும் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

மக்கள் மனங்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டு இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும் இடம் கொடுப்பதே அரசியல் கட்சிகளினதும், தலைவர்களினதும் தலையாய கடமையாக இருக்க வேண் டும்.

என்னுடையதும் ஏனைய சில முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களதும் போட்டியிடா திருக்கின்ற முடிவு ஏனையவர்களும் உணர்ந்து முடிவெடுக்க உந்துதலாக அமையும் என தெரிவித்தார். (6-285)

# கசிப்பு வழங்க முற்பட்டவருக்கு 1 லட்சம் ரூ. சரீரப்பிணை

(தருமபுரம்)

கிளிநொச்சி நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உதயநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞனை பார்ப்பதற்காகச் சென்ற அவருடைய நண்பர்கள் இருவர் குளிர்பானத்துடன் கசிப்புக் கலந்து கொடுக்க முற்பட்டுள்ளனர்.

இதனை அவதானித்த கடமையிலிருந்த பொலிஸார் இரண்டு நபர்களையும் கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தி ஒரு லட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (நி-316)


UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

WALK-IN-INTERVIEW

Library of Tamilology, University of Jaffna

(Operated the Kandiah Karthigasan Trust Fund)

A walk in interview for the post of **PROJECT ASSISTANT** on daily paid basis will be held on **08/10/2024 (Tuesday) at 9.00 am** at the Board Room of this University.

**Qualifications:**

I. Should have passed the G.C. E. (O/L) Examination in six subjects (not more than two sittings) with credit passes including Tamil Language, Mathematics and English Language.

And

II. Should have passed the G.C. E. (A/L) Examination with three passes.

And

III. Should have obtained a certificate of proficiency not below the NVQ level 4 issued by a Technical/Vocational Training Institute accepted by the Tertiary and Vocational Education Commission or recognized Institution in the field of Information and Communication Technology/ Information Communication and Multimedia Technology/ Data base Management System/ Graphic Design.

- Preference will be given to those who have work experience in ICT/ Database Management System.

**Key Tasks include :**

- Assisting the shelving and maintaining of library collections, procurement activities by maintaining records.
- Assisting the relevant officers in the management of financial activities.
  (Maintaining financial records, filing system, utilization of operation fund released)
- Assisting the overall implementation of project activities assigned by the Project Coordinator and the Librarian.

**Age:** Not more than 35 years on the closing date of application.
**Salary:** Rs 1701.00 per day will be paid.

Candidates are required to appear with relevant certificates, NIC with duly filled application in the prescribed format available in the University website – www.jfn.ac.lk

**REGISTRAR,**
**University of Jaffna.**

(C-1324)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 596





ஆனால் அவருடைய அந்திம காலத்தில் இராஜ்யத்துக்கும் இராஜ குலத்துக்கும் பல விபத்துக்கள் ஏற்பட்டன. இராவணேசுவரனுடைய மூல பல சைன்யத்தைப் போல் இரட்டை மண்டலத்துப் படைகள் படை எடுத்து வந்தன. பராந்தகச் சக்கரவர்த்தியின் மூத்த புதல்வரும் ஒப்புவமையில்லாத வீராதி வீரரும் உன் பெரிய தகப்பனாருமான இராஜாதித்த தேவர் இரட்டை மண்டலத்து மாபெரும் சைன்யத்தை எதிர்க்கப் புறப்பட்டார்.

வடக்கே தக்கோலம் என்னுமிடத்தில் குருக்ஷேத்திர யுத்தத்தைப் போன்ற மாபெரும் போர் நடந்தது. லட்சக் கணக்கான வீரர்கள் மாண்டனர். இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. இரட்டை மண்டலத்தாரின் சைன்யம் சிதறி ஓடியது ஆனால் அந்தப் போரில் இராஜாதித்த தேவர் பலியாகிவிட்டார். உன்னுடைய சித்தப்பா அரிஞ்சயத் தேவரும் அந்தப் போரில் ஈடுபட்டுப் படுகாயம் அடைந்தார். ஆனால் அவரைப் பற்றி யாதொரு விவரமும் அப்போது தெரியவில்லை. அரிஞ்சய தேவரின் மூத்த புதல்வர் சுந்தர சோழர் சின்னஞ் சிறு பிராயத்துப் பிள்ளை ஈழத்துப் போருக்குச் சென்றிருந்தார். அவரைப் பற்றியும் செய்தி கிட்டவில்லை. இராஜ குலத்தில் பிறந்து அச்சமயம் தஞ்சை அரண்மனையில் பராந்தகச் சக்கரவர்த்தியின் அருகில் இருந்தவர் உன் தந்தை தான்.

ஆனால் உன் தந்தையோ இளம் பிராயத்திலேயே இராஜ்ய விவகாரங்களை வெறுத்துச் சிவபெருமானிடம் மனத்தைச் செலுத்தி வந்தவர். அவருக்கு யுத்தம் என்றால் பிடிப்பதில்லை. மன்னர்களின் மண்ணாசை காரணமாக மக்கள் போரிட்டு மடிவானேன் என்று அவர் வருந்தினார். தந்தையிடமும் சகோதரர்களிடமும் அதைக் குறித்து வாதித்தார். சிவஞானச் செல்வர்களான பெரியோர்களின் சகவாசத்திலும் புண்ணிய ஸ்தல யாத்திரையிலும், ஆலய வழிபாட்டிலும் காலத்தைச் செலவிட்டார். வாள் வேல் முதலிய ஆயுதங்களைக் கையினால் தொடவும் அவர் விரும்பவில்லை. யுத்த தந்திரங்களிலும் போர் முறைகளிலும் அவர் பயிற்சி பெறவில்லை. பொய்யும் புனை சுருட்டும், வஞ்சகமும் வேஷமும் சூழ்ச்சிகளும் மறு சூழ்ச்சிகளும் கொலை முதலிய பாவங்களும் நிறைந்தது இராஜரீகம் என்று அவர் நம்பினார். 'திருடன் பிறர் பொருளைத் திருடுவதற்கும் ஒரு நாட்டு அரசன் இன்னொரு நாட்டைக் கவர்வதற்கும் என்ன வித்தியாசம்? என்று அவர் கேட்டார்.

மகனே! விதிவசத்தால் அப்படிப்பட்ட கொள்கையுடைய உன் தந்தை இந்தச் சோழ நாட்டின் பாரத்தை வகிக்கும் படியாக நேர்ந்து விட்டது. பராந்தகச் சக்கரவர்த்தி, இராஜ்யத்துக்கு நேர்ந்த பல விபத்துக்களினாலும் இராஜாதித்தரின் மரணத்தினாலும் மனம் நொந்து மரணத்தை எதிர்பார்த்திருக்கும் வேளையில் உன் தந்தையை அழைத்து, 'இராஜ்ய பாரத்தை நீ தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்றார்.

உன் தந்தை மரணத் தறுவாயிலிருந்த உன் பாட்டனாரின் மனத்தை மேலும் புண்படுத்த விரும்பாமல் ஒப்புக்கொண்டார். உன் தந்தையை எனக்கு முன்னால் மணந்திருந்த பாக்கியவதியான வீரநாராயணி தேவி அதற்கு முன்னரே சிவபதம் அடைந்து விட்டார். நானோ அப்போது உன் தந்தையைப் பார்த்ததே இல்லை. ஆகையால் உன் தந்தையின் காலத்துக்குப் பிற்பாடு சோழ மகாராஜ்யம் என்ன ஆவது என்ற கவலை உன் பாட்டனாருக்கு ஏற்பட்டது. அதிஷ்டவசமாக அச்சமயத்தில் உன் சிறிய தந்தையின் குமாரரைத் தேடுவதற்காக ஈழத்திற்குப் போனவர்கள் அங்கே ஒரு தீவிலிருந்த சுந்தர சோழரைக் கண்டுபிடித்து அவரை அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

பராந்தகச் சக்கரவர்த்தி சுந்தர சோழரிடம் அளவிலாத பிரியம் வைத்திருந்தார். குழந்தையாயிருந்த நாளிலிருந்து, மடியில் வைத்துத் தாலாட்டிப் பாராட்டி வளர்த்து வந்தார். பெரியோர்கள் பலர், சுந்தரசோழரின் மூலமாய்ச் சோழகுலம் மகோன்னதம் அடையப் போகிறது என்று சொல்லியிருந்தார்கள்.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### அப்துல்கலாம்

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், மிகப்பெரிய பொருளாளர், இந்தியாவின் பதினொராவது குடியரசுத்தலைவர், இந்திய ஏவுகனை நாயகன், இந்திய விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, சிறந்த ஆசிரியர் மற்றும் அனைவராலும் மதிக்கத்தக்க அற்புதமான பேச்சாளர், வருங்கால இளைஞர்களின் முன்மாதியாகக் கருதப்படுபவர். ஏ.பி.ஜே.அப்துல்கலாம் ஆவார். 1931 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி ஜைனுலாப்தீனுக்கும், ஆஷியம்மாவுக்கும் மகனாக இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில், பாம்பன் தீவில் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கும் சிறிய நகராட்சியான இராமேஸ்வரத்தில் பிறந்தார். இவர் ஒரு இஸ்லாமிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அப்துல்கலாம் இராமேஸ்வரத்திலுள்ள தொடக்கப் பள்ளியில் தனது பள்ளிப்படிப்பைத் தொடங்கினார். ஆனால் இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால் இளம் வயதிலே இவர் தன்னுடைய குடும்பத்திற்காக வேலைக்குச் சென்றார்.

பள்ளி நேரம் போக மற்ற நேரங்களில் இவர் செய்தித்தாள்கள் விநியோகம் செய்தார். இவருடைய பள்ளிப் பருவத்தில் இவர் ஒரு சராசரி மாணவனாகவே வளர்ந்தார். தன்னுடைய பள்ளிப்படிப்பை முடித்த பிறகு திருச்சிராப்பள்ளியிலுள்ள "செயின்ட் ஜோசப்" கல்லூரியில் இயற்பியல் பயின்றார். 1954 ஆம் ஆண்டு இயற்பியலில் இளங்கலை பட்டம் பெற்றார். ஆனால் இயற்பியல் துறையில் ஆர்வம் இல்லை என உணர்ந்த இவர் 1955 ஆம் ஆண்டு தன்னுடைய "விண்வெளி பொறியில்" படிப்பை சென்னையிலுள்ள எம்.ஐ.டி இல் தொடங்கினார்.

பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்றார். 2002 ஆம் ஆண்டு நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலை வராக ஜீலை 25 ஆம் திகதி 2002 இல் பதவியேற்றார். குடியரசுத் தலைவ



ராவதற்கு முன் இந்தியாவின் மிகப் பெரிய விருதான "பாரத ரத்னா" விருதை மத்திய அரசு இவருக்கு வழங்கி கௌரவித்தது. மேலும் "பாரத ரத்னா" விருது பெற்ற மூன்றாவது குடியரசுத் தலைவர் என்ற பெருமையைப் பெற்றார். 2007 ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராக இருந்த இவர் "மக்களின் ஜனாதிபதி" என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

உலகம் போற்றும் விஞ்ஞானியான கலாம் தன்னுடைய பொன்மொழிகளாலும், கவிதைகளாலும் வாசகங்களாலும் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

## பொது அறிவு

- ஐரோப்பாவின் போர்க்களம் என்று அழைக்கப்படும் நாடு எது?

  **பெல்ஜியம்**
- உலகில் முதன் முதலாக இரட்டை மாடி ரயில் எந்த நாட்டில் அறிமுகம் செய்யப் பட்டது?

  **அமெரிக்கா**
- புன்னகை நாடு என்று அழைக்கப்படும் நாடு எது?

  **தாய்லாந்து**
- உலகின் மிகப்பெரிய ஆறு எது?

  **அமேசான் ஆறு**
- உலோக நாணயத்தை வெளியிட்ட நாடு எது?

  **அமெரிக்கா**
- உலகின் மிகப்பெரிய தீவு எது?

  **கிரீன்லாந்து**
- இந்தியாவின் முதல் நவீன துறைமுகம் எது?

  **மும்பை**
- உலகில் மிக நீளமான சுவர் எது?

  **சீனப்பெருஞ்சுவர்**
- கின்னஸ் புத்தகம் வெளியிடும் அலுவலகம் எங்கு உள்ளது?

  **லண்டன்**

செ.தர்ஷனா, தரம்-05
கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கையின் சக்தியை தூய குறிக்கோளுடன் இணைத்து செயல்படுத்தும் போது எதையும் எளிதில் சாதிக்கலாம். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தென்பகுதியில் ஏற்பட்ட மாற்றம் தமிழர் தாயகத்திலும் பிரதிபலிக்குமா?

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதும் அவரிடமான மக்களின் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

அதாவது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவார். அந்த மாற்றம் ஊழலை, மோசடிகளை, அடாவடித்தனங்களை இல்லாது செய்து சமூக நீதியை வலுப்படுத்துவதாக இருக்கும் என நம்பப்படுகிறது.

பொதுவில் அநுர குமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக மக்கள் தெரிவு செய்ததன் பின்னணியில், மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே இலக்காக இருந்தது.

அதற்காக சிங்கள மக்கள் கடுமையாகப் பாடுபட்டார்கள்.

அவர்களுக்கு புலம்பெயர் சிங்கள மக்களும் கணிசமாக உதவி செய்தார்கள்.

ஊழல்வாதிகளிடமிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்ற இலட்சியம் அநுரவை ஜனாதிபதியாக்கியதன் மூலம் எட்டப்படும் என்பதே ஒட்டுமொத்த சிங்கள மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இதை நாம் கூறும்போது, தென்னிலங்கையில் ஏற்பட்ட இந்த மாற்றம் தமிழர் தாயகத்திலும் பிரதிபலிப்பதைக் காண முடிகிறது.

அதாவது தமிழர் அரசியலிலும் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற சிந்தனை வலுவடையத் தொடங்கியுள்ளது.

அவ்வாறான சிந்தனைக்கு ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளே காரணமாக இருந்தன என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இங்குதான் ஒரு முக்கிய விடயத்தை நாம் மீள்வாசிப்புக்கு உட்படுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

ஆம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை மாற்றங்களை அவர்கள் எளிதில் விரும்புவதில்லை.

இதை இன்னும் ஒருபடி மேற்சென்று கூறுவதாயின், மாற்றத்தை ஏற்படுத்துவது சவால் நிறைந்தது.

ஆகையால் எதை நாம் காலாகாலமாகப் பின்பற்றினோமோ – எதை நாம் நெடுங்காலமாக அனுசரித்தோமோ அதனைத் தொடர்வதுதான் உசிதமானதென்பது நம் தமிழ் மக்களின் நிலைப்பாடு.

ஆயினும் மாற்றத்தை விரும்பாத நம்மிடம்; **போலச்** செய்கின்ற குண இயல்பு உண்டென்பதை மறந்து விடக்கூடாது.

இங்கு போலச் செய்வது தொடர்பில் யாரேனும் பொருள் கொள்வதில் இடர்பட்டால், அவர்களுக்காக ஓர் உதாரணத்தை முன்னிறுத்தலாம்.

அதாவது, நல்லூர் முருகன் ஆலயத்தின் அமைப்பை பின்பற்றி இதர ஆலயப் புனரமைப்பு வேலைகள் செய்யப்படுவதை, போலச் செய்தல் எனலாம்.

ஆக, புதிய மாற்றத்தை விரும்புவதில் பின்னடிக்கின்ற நம் தமிழ் மக்களிடம்; போலச் செய்கின்ற மனநிலை இருப்பதன் காரணமாக, தென்பகுதியில் நடந்த அரசியல் மாற்றம் அநுர குமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக்கியதன் பின்னணியில், எங்கள் தமிழர் தாயகத்திலும் போலச் செய்தல் என்பதனூடாக **மாற்றம்** வலுப்படக்கூடிய வாய்ப்பு உண்டு.

இருந்தும் மாற்றம் தொடர்பில் சிங்கள மக்களை உசார்படுத்துவதில் தென்பகுதி புத்திஜீவிகளும் புலம்பெயர் சிங்கள அமைப்புகளும் ஆற்றிய வகிபாகம் நம் மத்தியில் வெற்றிடமாக உள்ளதால், அதுபற்றிய தேவையும் சிந்தனையும் இங்கு அவசியமாகிறது.

# இலங்கை விஜயத்தின் போது இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்

## தமிழக மீனவர்கள் ஜெய்சங்கருக்குக் கடிதம்

(சென்னை)

இலங்கை விஜயத்தின்போது இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என தமிழக மீனவர்கள் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அரசு முறைப் பயணமாக நாளை வெள்ளிக்கிழமை (04) இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கு தமிழக மீனவர்கள் சார்பாக 4 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தேசிய பாரம்பரிய மீனவர்கள் கூட்டமைப்பினால் இந்த கோரிக்கைகள் அடங்கிய கடிதம் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1974ஆம் ஆண்டு கச்சதீவு ஒப்பந்தத்தின் ஆறாவது சரத்தில் உள்ள பாரம்பரிய மீன்பிடிக் கடலில் உள்ள மீன் பிடிக்கும் உரிமையை உறுதி செய்ய வேண்டும்.

இலங்கை சிறையில் உள்ள 125க்கு மேற்பட்ட இந்திய மீனவர்களையும், 190க்கும் மேற்பட்ட விசைப்படகு மற்றும் நாட்டுப்படகுகளை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்பட்டு தமிழக கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட 10க்கு மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகளை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற 4 கோரிக்கைகள் குறித்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ம-7)

## பாராளுமன்ற ஒத்துழைப்புடன் அரசியலமைப்பு அமைக்கப்பட வேண்டும்

### ரன்ஜித் மத்துவ பண்டார

ஒட்டுமொத்த பாராளுமன்றத்தின் ஒத்துழைப்புடன் புதிய அரசியலமைப்பு அமைக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரன்ஜித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதித் தேர்தல்களில் 50 வீதமான வாக்குகள் ஜனாதிபதிகளுக்கு கடந்த காலங்களில் கிடைத்துள்ளது.

ஆனால், புதிய ஜனாதிபதிக்கோ 42 வீதமானோரின் வாக்குகளே கிடைத்துள்ளன. அதாவது 78 இலட்சம்பேர் அவருக்கு எதிராகவே வாக்களித்துள்ளார்கள். புதிய அரசியலமைப்பொன்றை ஸ்தாபிக்க நாம் ஆதரவளிக்கத் தயார்.

தனியொரு கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்கள் தான் நாட்டையே அழிவுக்கு இட்டுச் சென்றிருந்தன.

உதாரணமாக, 18, 20 ஆவது திருத்தச்சட்டங்களை இதற்கு எடுத்துக் கொள்ளலாம். ஆனால், ஒட்டுமொத்த பாராளுமன்றமும் இணைந்து செய்த அரசியலமைப்புத் திருத்தங்களான 17, 19, 21 அரசமைப்புத் திருத்தச் சட்டங்கள், நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்டியிருந்தன.

தேசிய மக்கள் இவற்றை பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும் இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரன்ஜித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார். (ம-7)

## பருத்தித்துறை அஞ்சலகம் நடாத்தும் விளையாட்டு நிகழ்வு

(பருத்தித்துறை)

உலக அஞ்சல் தினத்தினை முன்னிட்டு பருத்தித்துறை அஞ்சலகத்தின் ஏற்பாட்டில் வடமராட்சிக்குட்பட்ட அரச திணைக்களங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியளவில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பருத்தித்துறை அஞ்சலக பதில் அஞ்சலதிபர் பி. நிஸந்தன் அவர்கள் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக அஞ்சல் அத்தியட்சகர் செந்தில் குமார் அவர்கள் கலந்து கொள்வதோடு சிறப்புவிருந்தினராக பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க அவர்களும் வடமாகாண இறைவரித்திணைக்கள நிர்வாக உத்தியோகஸ்தர் ரமேஸ்வரன் மற்றும் ஓய்வுநிலை அஞ்சலதிபர் அருளானந்த சோதி அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

## யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் கொடியேற்றம் இன்று

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான (பெருமாள் கோவில்) குரோதி வருஷ திவ்விய மகோற்சவமானது இன்று வியாழக்கிழமை (3) துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை 04.30 மணிக்கு உதயப்பூசையினை தொடர்ந்து மகா [illegible] காலை 08.30 மணிக்கு வசந்தமண்டபப்பூஜையிடம்பெற்று சூரியப்பரிதி வாகன சேவையில் வரதராஜப் பெருமாள் தம்பமண்டபத்தை அடைதலைத்தொடர்ந்து காலை 10.00 மணியளவில் கொடியேற்றம் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் இடம்பெறவுள்ள மகோற்சவந்தனில் காலை 10.15 மணிக்கும் மாலை 05.00 மணிக்கும் வசந்தமண்டபப்பூஜை இடம்பெறவுள்ளது.(ம-7)

## பாடசாலை மாணவர்களுக்கான காலணிகளின் விலையை குறைக்க தீர்மானம்

பாடசாலை மாணவர்களுக்கான காலணிகளின் விலைகளை விரைவில் குறைக்க தீர்மானித்துள்ளதாக காலணி மற்றும் தோல் பொருட்கள் தொழில் துறையினர் சங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

காலணி மற்றும் தோல்பொருட்கள்தொழில் துறையினர் சங்கத்தின் தலைவர் புத்திக விமலசிறி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கமொன்று பதவிக்கு வந்ததும் பல விடயங்களை எதிர்பார்க்கும். இந்த சமூகத்தில் நாட்டின் தொழில்துறையினரும் வடிவமைப்பாளர்களும் அரசாங்கத்திற்கு ஆதரவளி க்கவேண்டியது அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்து. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத இராசி பலன்கள்-2024



கிரகநிலை: இராசியில் செவ்வாய் - தைரிய வீரிய ஸ்தானத்தில் புதன் - சுக ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், கேது - பாக்கிய ஸ்தானத்தில் சந்திரன், சனி (வ) - தொழில் ஸ்தானத்தில் ராகு - அயன சயன போக ஸ்தானத்தில் குரு என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 06-10-2024 அன்று புதன் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறு கிறார். 14-10-2024 அன்று சுக்கிரன்

வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25-10-2024 அன்று புதன் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் இராசி நாதன் புதனின் சஞ்சாரத்தால் ஆக்கப் பூர்வமான யோசனைகள் தோன்றும். பேச்சில் கடுமை அதிகரிக்கலாம். மற்ற வர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்படாமல் கவனமாக இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் மந்தமாக காணப்பட்டாலும் பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் வேலைப்பளு இருக் கும். சக ஊழியர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. குடும் பத்தில் இருப்பவர்களுடன் வாக்கு வாதத்தை தவிர்ப்பது நல்லது. கண வன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து போவது நன்மை தரும். பிள்ளைகளின் நலனில் அக்கறை தேவை. பெண்களுக்கு வீண் பேச்சை

கவனம் தேவை. பாடங்களை படிப்பதில் தீவிரம் காட்டு வீர்கள்.

**மிருகசீரிடம்: 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் சின்ன விடயங்கள் கூட மன நிறைவு தரும்படி இருக்கும். அரசியல் துறையினருக்கு சில நற்பலன்கள் ஏற்பட்டாலும் சிறு மனகஷ்டமும் அவ்வப்போது உண்டாகும். எதை பற்றியும் கவலைப்படாமல் தீர ஆலோசித்து எதை




யும் செய்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் சிறுசிறு பிரச்சினைகள் உண்டாகலாம். குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்திலும், வாழ்க்கை துணை யின் ஆரோக்கியத்திலும் கவனம் தேவை.

வர்களுக்கு கல்வியில் இருந்த தடை நீங்கி முன்னேற்றம் உண்டாகும். போட்டிகளில் சாதகமான பலன் கிடைக் கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரி கூறுவதுபடி நடந்து கொள் வது நன்மை தரும். நிலுவையில் உள்ள பணம் வரலாம்.

**புனர்பூசம்: 1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எதையும் செய்து முடிக்கும் துணிச்சல் அதிக ரிக்கும். எதிலும் வெற்றியும் சந்தோஷமும் உண்டாகும். பணம் வருவது அதிகரிக்கும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகளில் தீர்வு கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் உண் டாகும். பெண்கள் வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நல்லது. கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. மற்றவர்களுக்கு வலிய சென்று உதவு வதால் வீண் விரோதம் ஏற்படும்.

**பரிகாரம்:**

பெருமாளை வணங்கி வர முன் ஜென்ம பாவம் நீங்கும். திருமண மாகாதவர்களுக்கு திருமணம் கைகூடும்

## எதிலும் வெற்றியும் சந்தோஷமும் உண்டாகும் மிதுன இராசியினரே

தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தா னத்திற்கு மாறுகிறார். 17-10-2024 அன்று சூரியன் சுக ஸ்தா னத் தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 23-10-2024 அன்று செவ்வாய் இராசியில் இருந்து தன

குறைப்பது நல்லது. கலைத் துறையினருக்கு பொருளாதார நிலை உயரும். அரசியல்துறையினர் எடுக்கும் காரியங்களை நல்லபடியாக செய்து முடிப்பீர்கள். மாணவர்களுக்கு அடுத்த வர்களுக்கு உதவிகள் செய்வதில்

**திருவாதிரை:** இந்த மாதம் எதிர் பாலினத்தாரிடம் பழகும் போது எச் சரிக்கை அவசியம். கடன் கொடுப்பது, பைனான்ஸ் போன்றவற்றில் மிகவும் கவனமாக இருப்பது நல்லது. மாண

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 11, 12, 13

**அதிஷ்ட தினங்கள்:** 4, 5, 6



**கிரகநிலை:** தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் புதன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், கேது - அஷ்டம ஸ்தானத்தில் சந்திரன், சனி (வ) - பாக்கிய ஸ்தானத்தில் ராகு - லாப ஸ்தானத்தில் குரு - அயன சயன போக ஸ்தானத்தில் செவ்வாய் என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 06-10-2024 அன்று புதன் தைரிய வீரிய ஸ்தா னத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு

இருந்து இராசிக்கு மாறுகிறார். 25-10-2024 அன்று புதன் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத் திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் நல்ல பலன்கள் வரும். எதிர்ப்புகள் விலகும். பணவரத்து திருப்தி தருவதாக இருக்கும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். சில நேரங்களில் அவசரத் தன்மை ஏற்படலாம். வாகனங்களை ஓட்டி செல்லும் போது கவனம் தேவை. தொழில், வியாபாரம் சுமாராக நடக்கும்.

பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக பணிகளை மேற்கொள்வது நல்லது. பதவி உயர்வு, நிலுவையில் உள்ள பணம் வருவது தாமதப்படும். குடும்பத்தில் ஏதேனும் குழப்பம் ஏற் படலாம். கணவன் மனைவிக்கி டையே கருத்து வேற்றுமை வந்து நீங்கும்.

உறவினர்களிடம் நிதானமாக பேசு வது நல்லது. பிள்ளைகளை அனு சரித்து செல்வது நன்மை தரும்.

தடைகள் நீங்கி ஆர்வமாக படிப் பீர்கள்.

**புனர்பூசம் 4ஆம் பாதம்:** இந்த மாதம் உங்களது வார்த்தை களுக்கு மதிப்பு கூடும். கணவன், மனை விக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்க ளுக்கு உங்களுக்கு கீழே உள்ளவர் களால் நன்மை உண்டாகும்.




சொத்துக்கள் வாங்குவது, விற்பது ஆகியவற்றில் கவனம் தேவை. பயணங்களின் போதும் வாகனங்களில் செல்லும் போதும் எச்சரிக்கை தேவை.

காண்பீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருக்கும். எதிர்பார்த்த நிதி வசதி கிடைத்தாலும், திட்டமிட்டதை விட கூடுதல் செலவும் இருக்கும். பணியாளர்களிடம் நிதா னத்தை கடைபிடிப்பது நல்லது.

**ஆயில்யம்:** இந்த மாதம் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் நடந்து முடியும். கலைத்துறையின ருக்கு கௌரவம் உயரும். விரும்பிய பதவி கிடைக்கும். வழக்கு விவகாரங் கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். கைவிட்டுப் போன பொருட்கள் மீண்டும் கிடைக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் கூடும். பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். குடும்பத்தாருடன் விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நேரலாம்.

**பரிகாரம்:**

பிரத்தியங்கரா தேவியை அர்ச்சனை செய்து வணங்கிவர எல்லா கஷ்டமும் நீங்கும். எதிர்ப்புகள் அகலும்.

## பணவரத்து திருப்தி தருவதாக இருக்கும் கடக இராசியினரே

மாறுகிறார். 14-10-2024 அன்று சுக்கிரன் தன வாக்கு குடும்ப ஸ்தா னத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தா னத்திற்கு மாறுகிறார். 17-10-2024 அன்று சூரியன் தைரிய வீரிய ஸ்தானத் தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறு கிறார். 23-10-2024 அன்று செவ்வாய் அயன சயன போக ஸ்தானத்தில்

பெண்களுக்கு சுபச்செலவுகள் ஏற்படும். கலைத்துறையினருக்கு மந்தமான காரியங்கள் வேகமெடுக்கும்.

அரசியல்துறையினருக்கு சுபச் செல வுகள் ஏற்படும். மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் இருந்த மன வருத் தம் நீங்கும். பாடங்களை படிப்பதில் இருந்த

**பூசம்:** இந்த மாதம் துணிச்சலாக முயற்சிகள் மேற்கொண்டு வியா பாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். மேலதிகாரிகளால் நன்மை ஏற்படும். காரியங்களை துணிச் சலாக செய்து முடித்து வெற்றி

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன் - வெள்ளி ;

**சந்திராஷ்டம தினங்கள்:** 14, 15

**அதிஷ்ட தினங்கள்:** 7, 8

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிப்படைத்...

சாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச நாணய நிதியத்துடன், புதிய ஜனாதிபதி வெளிப்படையான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பார் என்று நாம் நம்புகிறோம்.

ஏனெனில், 2023ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி, பாராளுமன்றிலுள்ள எந்தவொரு கட்சியுடனும் கலந்துரையாடாமல்தான் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்.

இதன் பின்னர்தான் பாராளுமன்றுக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப் பட்டது.

இந்த விடயத்தில் நாம் ஒன்றாக ஒரு நாடாக முகம் கொடுத்தால், சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்குநர்களுடன் சக்திமிக்கதொரு கலந்துரையாடலை மேற்கொள்ள முடியும்.

ஊழல், மோசடிகளுக்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான வரப்பிரசாரங்களை இரத்துச் செய்வது தொடர்பான நடவடிக்கைகளுக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவே உள்ளோம். இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (ம-7)

## வீடொன்றில்...

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் வீடொன்றில் ஏற்பட்ட தீயினால் வீட்டில் இருந்த பெறுமதியான பல பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

வீடு தீப்பற்றி எரிவதனைக் கண்ட அயலவர்கள் தீயினை அணைக்க முற்பட்டதுடன் , மாநகர சபை தீயணைப்புப் படையினருக்கும் அறிவித்தனர். அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயை அணைத்தனர்.

தீ விபத்துக்குக் காரணம் கண்டறியப் படாத நிலையில் யாழ்ப்பாணப் பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் ஆகியோர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## வட மாகாண...

உள்ளன.

ஆளுநர் செயலகத்தில் கட்மையாற்றிய ஆளுநர் செயலக காணி உதவி ஆணையாளர், அபிவிருத்தி உதவியாளர் மற்றும் சாரதி ஒரு வருக்குமாக குறித்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வட மாகாண புதிய ஆளுநராக வேதநாயகன் பொறுப்பேற்று ஒரு வாரம் முடிவதற்கு முன்னர் குறித்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அரசின்...

இடம்பெற்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்கவின் வெற்றிக்கு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்த இந்திய உயர்ஸ்தானிகர், இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு சகல வழிகளிலும் ஆதரவளிக்க இந்தியா தயாராக இருப்பதாகவும், பிராந்தியத்தில் அமைதியான மற்றும் நிலையான நாடாக இலங்கை வெளிப்படுவதை காண்பதே தமது நாட்டின் எதிர்பார்ப்பு எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவையும் நெருக்கத்தையும் நினைவுகூர்ந்த இந்திய உயர்ஸ்தானிகர், அண்டைய சகோதர நாடுகள் என்ற வகையில் இரு நாடுகளுக்கும் இடையில் தொடர்ச்சியான மற்றும் நிலையான நட்பைப் பேணி முன்னேறுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

ஊழலுக்கு எதிராகத் திறம்படப் போராடுவதற்கு அரசாங்கக் கட்டமைப்புகளை டிஜிட்டல் மயமாக்குவதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டிய இந்திய உயர்ஸ்தானிகர், ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புத் திட்டத்தையும் பாராட்டினார்.

மேலும், டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கைக்கு ஆதரவளிக்க இந்தியா தயாராக இருப்பதாக உயர்ஸ்தானிகர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## இனந்தெரியாத...

வரும் புடைவையகம் ஒன்று இரண்டு மாதத்திற்குள் இரண்டு தடவை தீ வைக்க முற்பட்ட நிலையில் அது தோல்வியில் முடிவடைந்தது.

இந்நிலையில் நேற்றிரவு இலக்க தகடை மறைத்த நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று நபர்கள் வாள்களுடன் கடைக்குள் சென்று பெற்றோல் ஊற்றி புடைவையகத்துக்கு தீ வைத்துச் சென்றுள்ளனர்.

இதனால் தீ கடைக்குள் பற்றிய நிலையில் அயலில் உள்ள உணவகத்தில் இருந்து தண்ணீர் வழங்கப்பட்டு தீயணைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,60)

## ஒரு கோடியே...

ருந்த நபரை தாக்கி விட்டு பணத்தை இருவர் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சங்குவேலிப் பகுதியைச்சேர்ந்த நபர் ஒருவர், நேற்றுப் புதன்கிழமை தனது காணியை விற்ற பணத்துடன் சங்குவேலி நோக்கி திரும்பிக் கொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின் தொடர்ந்து வந்த இருவர் அவரை வீதியில் வழி மறித்து அவரை தாக்கி விட்டு பணத்தினைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

பணத்தினைப் பறிகொடுத்தவர், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## தோட்...

பிள்ளைகளின் தந்தையான சின்னமணி மகேந்திரராசா (வயது-59) என்பவரே உயிரிழந்தவராவார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7)

# 1 கிலோ 838 கிராம் ஐஸ் போதையுடன் சந்தேக நபர் கைது

பெலேன - வெலிகம பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் 20 வயதுடைய இளைஞன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிதிகம, இப்பாவல பிரதேசத்தில் வைத்து பொலிஸாரினால் சந்தேகநபர் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் மோட்டார் சைக்கிளை சோதனையிட்டபோது 1 கிலோ 838 கிராம் ஐஸ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றிவளைப்பின்போது, அந்த இடத்தில் இருந்த மேலும் மூன்று சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளதுடன், அவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை மிதிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.10.02
சீட்டிழுப்பு இலக்கம் 5613
G 7 6 4 3 0 2
அத சம்பத G 4 3 0 2
சீட்டிழுப்பு இலக்கம் 188

தன நிதானய
திகதி - 2024.10.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1643
L 09 12 68 75 L
72453

மெகா பவர்
திகதி 02/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1961
J 23 11 25 69 77
91428

லக்கி 7 VIP
திகதி 2024.10.02
சீட்டிழுப்பு இலக்கம் 0439
O 1 7 3 1 6 0 O

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3855
சீட்டிழுப்பு திகதி 02.10.2024
U 24 39 45 66
U 18960

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.02
சீட்டிழுப்பு இலக்கம் 922
மீனம் 07 40 44 56 மீனம்
76879 12

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.10.2024 வெற்றி வாரம் 321 வர்ணம் பச்சை
K 1 2 9 4 4 0
27860
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,044,588.00
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2587 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 02.10.2024 தினம் புதன்கிழமை
29 33 41 46 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,801,643.20

சனிதா
திகதி 2024.10.02 வெற்றி வாரம் 4748
10 30 32 38 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,753,945.60
76359

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4299 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.10.02 தினம் புதன்கிழமை
04 17 20 49 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,049,933.60
228033

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 29 06 07 30 74
1763
02.10.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 548,118,791.80

ஜயோதா Jayoda
திகதி 2024.10.02 வெற்றி வாரம் 2065 வர்ணம் மஞ்சள்
19 31 37 52 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,634,107.60

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2413
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,276,724.80
16 37 44 57 D
843790


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A/L - 2026**
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு
ஆரம்பம் : 05.10.2024 சனி காலை 10 மணி
DMI JAFFNA 077 848 0604
(2163)


# ஐ.நா.பொதுச் செயலாளர் இஸ்ரேலுக்குள் நுழையத் தடை

ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்டரெஸ் இஸ்ரேல் நாட்டிற்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலின் வெளியுறவுத்துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் கூறியுள்ளார்.

இஸ்ரேல் மண்ணில் ஐ.நா. பொதுச்செயலாளர் காலடி எடுத்து வைக்கத் தகுதியற்றவர்.

இஸ்ரேல் மீதான ஈரான் தாக்குதலை உலக நாடுகள் கண்டித்தன.

இதனைச் செய்யாமல் மௌனம் காக்கும் எவருக்கும் இஸ்ரேல் மண்ணில் கால் வைக்கத் தகுதி கிடையாது. ஹமாஸ், ஹெஸ்புல்லா ஹவுதி மற்றும் தற்போது ஈரானின் பயங்கரவாதிகளை ஆதரிக்கும் அந்தோனியோ குட்டரெஸ் இஸ்ரேல் வரலாற்றின் ஒரு கறையாக நினைவு கூரப்படுவார் எனவும், இஸ்ரேலின் வெளியுறவுத் துறை அமைச்சர் கூறியுள்ளார்.(ம-7)


**DCM** யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
A/L 2026
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம்: 05.10.2024 சனி காலை 8.00மணி
நிர்வாகம் : 077 7789815
(2192)

சதாபொன்ஸ் கல்வி நிலையம்
(ஒழுக்கம் சார் கல்வி)
மாலிசந்தி - அல்வாய்
2024 O/L மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் : 05.10.2024 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு
அனுமதிகள் இன்று முதல்
077 309 5176, 076 126 0105
(C-1326)

விசேட விலைக் கழிவு — X MARD — வியாழக்கிழமை 03.10.2024
- Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி
- Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா
- Rs.379 மஞ்சள் பருப்பு
- Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய்
- Rs. 999.00 Anchor 400g
- Rs.249.00 ~~300~~ Fems 8 Pcs
- Rs. 59.00 ~~80~~ Anchor Yoghurt
- Rs. 1799.00 ~~2000~~ Protinex
- Rs. 339.00 ~~425~~ Vim Liquid
- Rs. 2589.00 ~~3000~~ Vitagen Vannila
- Rs. 299.00 ~~380~~ Sunlight Powder Rose
- Rs. 1129.00 ~~1190~~ Anchor Plus
- Rs. 149.00 ~~175~~ Santoor Soap
- Rs. 439.00 ~~480~~ Chick Shampoo
- Rs. 2999.00 ~~3355~~ Diabeta Plus
- Rs. 379.00 ~~500~~ Ocean Star Mackerel
- Rs. 919.00 ~~1190~~ 5kg Prima Wheat Flour
- Rs. 3499.00 ~~3900~~ Sustagen 400g
- Rs. 149.00 ~~200~~ Noodles
- Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L

Call For Information 074 1011 345
மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும் வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்) 138, கே.கே.எஸ். வீதி.
(C-1328)

யாழ். நகருக்கு அருகில் காணி விற்பனைக்கு
A9 பிரதான வீதியிலிருந்து 250M தூரம் மிகவும் மலிவான விலையில் (1 பரப்பு 390,000 மட்டும்)
இரண்டு, மூன்று பரப்புகளாக பிரிக்கப்பட்ட காணித் துண்டுகள் சிவபூமிக்கு மிகவும் அருகிலும், தொழிற்சாலை, புகையிரத நிலையம், சித்த மருத்துவபீடம், வங்கி, வடமாகாணசபை அனைத்தும் நடை தூரத்தில்
077 012 3075
(2177)

பொருளியல் கருத்தரங்கு
A/L 2024
வளவாளர் : S.JEYAKUMAR
B.A(Hons) Econ spl, M.A in Econ(Pera) P.G.D.E
- பரீட்சை எதிர்பார்ப்பு வினா விடைகள்
- புள்ளித்திட்ட விளக்கம்
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்
- கையேடுகள் வழங்கப்படும்
- 40 மணித்தியாலங்கள் நடைபெறும்

ஆரம்பம் : 06.10.2024 ஞாயிறு 2.00 மணி
இடம் : NEW SCIENCE HALL, JAFFNA
- வெளி மாணவர்களும் பங்குபற்ற முடியும்.
- வெளி மாவட்ட மாணவர்களுக்கு zoom செயலி மூலம் நடைபெறும்

077 723 8597/076 535 0999/077 778 9815
(2187)

புத்தம் புதிய வெளியீடு!
LOGIC
பாடத்திற்கான
விஞ்ஞானமுறை
வினா - விடை அமைப்பில்
எஸ்.எஸ்.மனோகரன்
(2185)

வேலையாட்கள் தேவை
ஆவரங்காலில் உள்ள கொங்கிறீட் உற்பத்தி நிலையத்திற்கு தூண்,கல் அரிவதற்கு வேலையாட்கள் தேவை.
077 714 8146
077 783 6878
(391)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1325)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-1325)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை, யாழ்.
A/L தொழில்நுட்பப் பிரிவு
புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2026
- திகதி - 05.10.2024(சனிக்கிழமை)
- நேரம் - காலை 8.30 மணி

தொடர்புகளுக்கு:
077 017 5346
(C-1323)

K.P.C
இருபாலை வீதி, கோண்டாவில்
A/L 2026
வர்த்தகத்துறைக்குரிய
புதிய பிரிவு ஆரம்பம்
05.10.2024 சனிக்கிழமை 3.00pm

| | |
|---|---|
| பொருளியல் | S.JEYAKUMAR |
| கணக்கீடு | A.T.SUREN |
| வணிகக்கல்வி | T.S.RICHI |

077 723 8597
(2187)

O/L கணிதம்
(தமிழ் மூலம்)
கணித பாடத்தில் F,W,S எடுத்த மாணவர்களிற்கான விசேட வகுப்பு (12.10.2024) விஜயதசமி அன்று ஆரம்பம்
உரும்பிராய்
071 803 4182
(2191)

யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்
யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 9000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)
(393)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.